## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.197/2023

Deposition of witness – PW6

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர். ராஜலட்சுமி | Caste | : |
| S/o. | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 23.06.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

எதிரி ஆஜர்.

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

முதல் விசாரணை

நான் தற்பொழுது தர்மபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.06.2020 ஆம் தேதி அன்று ஆத்தூர் அரசு மருத்துவமனையில் நான் பணி மருத்துவராக பணிபுரிந்து வந்த பொழுது நள்ளிரவு 12 மணி அளவில் நான்

மருத்துவமனையில் இருந்த பொழுது 37 வயது மதிக்கத்தக்க பெருமாள் என்பவர் தன்னை அடையாளம் தெரிந்த இரண்டு ஆண் நபர்கள் மற்றும் ஒரு பெண் ஆகிய மூவரும் சேர்ந்து தன்னை கட்டையால் 01.06.2020 ஆம் தேதி அன்று 8.45 மணியளவில் தன்னை தாக்கியதாக தெரிவித்தார். அவரை நான் பரிசோதனை செய்த பொழுது வலது மணிக்கட்டில் அவருக்கு 3 x 2 c.m அளவில் ஒரு கன்றிய காயம் காணப்பட்டது. எனவே அவரை உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்ட அவருக்கு சிகிச்சை வழங்கினேன். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். அவர் 10 நாட்கள் 12.06.2020 ஆம் தேதி வரை அவர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவர் சிகிச்சையில் இருந்த சமயம் அவருக்கு ஏற்பட்ட காயம் தொடர்பாக நுண்கதிரியல் படம் எடுக்கப்பட்டு அவருக்கு வலது மணிக்கட்டு எலும்பில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது தெரியவந்தது. அது தொடர்பான அவருக்கு அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டு அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இது தொடர்பாக அவர் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என நான் சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.3. ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார். நான் வழங்கிய விபத்து பதிவேட்டிலேயே அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என நான் சான்று வழங்கி உள்ளேன். இது தொடர்பான சான்று அ.சா.ஆ.4.

இரும்பு கம்பியால் காயம்பட்ட நபர் தாக்கப்படும் பொழுது இவ்வாறான காயம் கொடுங்காயமாக ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு .

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எலும்பு முறிவை காட்டக்கூடிய எந்தவித எக்ஸ்ரே பதிவேடுகளும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட எலும்பு முறிவானது கீழே விழுந்தால் கூட சாதாரணமாக ஏற்படக்கூடியது என்றால் சரியல்ல. காய்ச்சல் சான்றிதழ் காயத்தின் அடிப்படையில் தான் வழங்கப்பட்டது என்றும், அந்த காயம் எப்படி ஏற்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நோயாளி சொன்னதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது, அதன் அடிப்படையில் சிகிச்சை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

மறுவிசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.06.23 20:01:25 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சேலம்.